★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 16உ வெள்ளி (31—8—56) ★ ★ வெளியீடு : ஆவணி 17உ சனி (1—9—56) [இதழ் 70

கணவன்—மனைவி பேசும் இடங்கள்!

"வெளியில் பேச வேண்டியவைகளை நான் பேசுவது என்றும், வீட்டிற்குள் பேசவேண்டியவைகளை அவள் பேசுவது என்றும், எனக்கும் என் மனைவிக்கும் திருமணம் நடைபெற்றபொழுதே ஒரு உடன்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது" என்று, அமெரிக்கத் தலைமை நீதிபதி எர்ல்வாரன், டில்லி வானொலி அதிகாரியிடம் வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

ஒலி பரப்புவதற்காக எர்ல் வாரன் அவர்களின் பேச்சை, வானொலி அதிகாரி ஒலிப்பதிவு செய்தார்; அப்பொழுது, 'வாரன் மனைவியாரும் ஏதாவது சொல்லவேண்டும்' என்று அந்த அதிகாரி கேட்டதற்குத்தான், தலைமை நீதிபதி, தலைப்பில் கண்ட பதிலைக் கூறினார்!

'புரட்சிகரமான சர்க்கார் வேண்டும்'

'காங்கிரஸ் ஆட்சியில் ஏழை எளியோருக்கு வாழ்வு இல்லையே!'

'சிலருக்கு உத்தியோக உயர்வு தந்ததாலேயே காமராசர் நல்லவராகிவிட முடியுமா?'

'நிலப் பிரபுக்களுக்குச் சர்க்காரே உளவு சொல்லித் தருகிறது'

காங்கிரஸ் தந்திரம் குறித்து அண்ணு தெளிவுரை

"'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலனுக உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது; உணவுப் பஞ்சம் ஏற்படவே செய்யாது என்பது மட்டுமல்ல—வெளிநாடுகளுக்கு உணவுப் பொருள் ஏற்றுமதி செய்கிற அளவுக்கு உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது'—என்று மக்கள்சபையில் பெருமிதத்தோடு பேசினுர் பண்டித நேரு—இந்தியாவின் பிரதமர்!

"ஆனுல், கூறிய சில நாட்களுக்கெல்லாம் செய்தி ஒன்று வருகிறது—சுமார் ரூ. 80 கோடிக்கு வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள் இறக்குமதி செய்யப்போவதாக!

"பொன்னுரங்கம், திருப்புகழ் அழகாகப் பாடுவான்; ஆனுல் அவனுக்குத் திக்குவாய் என்ருல் என்ன அர்த்தம்? 'ஊர் மக்களை ஏமாற்றுகிற பேச்சு அது' என்பதுதானே! அப்படித்தானே இருக்கிறது காங்கிரஸ் சர்க்கார் பேச்சு?

"எகிப்திய நாட்டுத் தலைவர் நாசர், அந்த நாட்டிலுள்ள எல்லா விளை நிலங்களும் சுமார் 2,000 பாட்சாக்களிடம் இருப்பதைக் கண்டான்; அவர்களிடமிருந்து நிலங்களைப் பிடுங்கி, நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்கினுன்; 'ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் 10 ஏகர் நிலமிருக்க வேண்டும்; அதேபோது 200 ஏகர் நிலத்திற்கு மேல் எவரிடமும் இருக்கக் கூடாது' என்று வரம்பு கட்டினுர்.

"இங்கேயுள்ள காங்கிரஸ் சர்க்காரும் கடந்த எட்டாண்டுக் காலமாக, 'நில உடைமைக்கு வரம்பு கட்டுகிருேம்' என்று பேசிக்கொண்டே இருக்கிருர்கள்.

"வடபாதிமங்கலத்திடம் மட்டும் 12 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. இப்படி, வாண்டையார், பழையகோட்டை பட்டக்காரர் என்று பல நிலப் பிரபுக்கள் இருக்கிருர்கள்; இவர்கள் எல்லாம் இந்தச் சொத்துக்களை வேறு வேறு துறைகளுக்கு ஒதுக்குவதற்கு சர்க்காரே உளவு சொல்லித் தருகிருர்கள்.

"கருத்திருமன் என்று ஒரு காங்கிரஸ் எம்.எல்.ஏ.—அவர், நிலச் சீர்திருத்தக் குழுவிடம் கருத்தறிவிக்கும்போது, 'அதிகபட்சமாக ஒருவருக்கு 600 ஏக்கர் நிலம் இருக்கலாம்' என்று கூறினுராம்! 'ஏன்?' என்று கேட்டபோது, 'எனக்கு 600 ஏக்கர் நிலம் இருக்கிறது' என்று கூறுகிருர். இந்தத் தகவலை அவரே என்னிடம் கூறினுர். எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

"தஞ்சாவூரில் இன்னுமொரு நிலப்பிரபு—தனது நிலத்தில் 600 ஏகரை சர்க்கரை ஆலைக்கு என்று ஒதுக்கிவிட்டிருக்கிருர்!

"இன்னெருவர், கல்லூரி கட்ட 400 ஏகர் நிலம் ஒதுக்கிவிட்டு, அந்த நிலத்தைக் கண்காணிக்கும் 'டிரஸ்ட்' போர்டில் தனது உறவினர்களையே அமர்த்திவிட்டார்!

"சர்க்கார் பேசிக்கொண்டே இருப்பதால்—'நிலச் சட்டம் கொண்டு வரப்போகிருேம்' என்று கூறிக்கொண்டே இருந்து, காரியத்தில் எதுவும் செய்யாமலிருப்பதால், உள்ளதையும் இழந்து கொண்டிருக்கிருர்கள்!

"இப்படி இருக்கும் காங்கிரஸ் ஆட்சியை ஒழித்து ஒரு புரட்சிகரமான சர்க்கார் ஏற்பட்டாலன்றி நாட்டு மக்களுக்கு—ஏழை எளியோருக்கு வாழ்வு கிடைப்பது எப்படி?

"சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் லோகியா குறிப்பிட்டது போல, காங்கிரஸ் இன்று பணக்காரர்களிடமிருந்து பணத்தையும், ஏழையிடமிருந்து 'ஓட்'டையும் வாங்கிக்கொள்ளும் தந்திரம் கற்றிருக்கிறது; இந்த நிலை மாற வேண்டாமா?"

—இவ்வாறு அண்ணு அவர்கள், 26—8—56-ல், சென்னை-புளியந்தோப்பு தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்; அவரது சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"பழைய கணக்குகளைக் காட்டிவிட்டுப் புதிய கணக்கு எழுதும் காலம்தான் தேர்தல் காலம்.

"கடந்த ஐந்தாண்டுகளில் காங்கிரஸ், நாட்டு மக்களுக்குச் செய்தது என்ன என்ற பழைய கணக்குகளைக் காமராசர் மக்கள் மன்றத்திற்குத் தந்தாக வேண்டும். அந்தக் கணக்குகளை எதிர்க்கட்சியினராகிய நாம் சரிபார்த்துக் கூறுவோம். காமராசர் தப்புக் கணக்குக்காட்டினுல், நாம் அதனை அம்பலமாக்குவோம்!

"காங்கிரஸ் ஆட்சியில் வரிச்சுமை அதிகரித்திருக்கிறது. கொள்ளை கொள்ளையாக வரி தந்தும் மக்கள் வாழ்வில் மலர்ச்சி ஏதும் இல்லை; கஷ்டங்கள்தான் மிகுந்திருக்கின்றன என்று நாம் கூறுகிருேம். காமராசர், 'எங்கள் ஆட்சியில் வரிச்சுமை அதிகரிக்கவில்லை' என்ருே, 'மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கவில்லை' என்ருே கூற முடியுமா?

"இப்படி காமராசரை, மக்களுக்குக் கணக்குக் காட்டச் சொல்லுகிற காலம், தேர்தல் காலம்!

"'முட்டாளை அயோக்கியன் ஏமாற்றுகிருன்; அதுதான் தேர்தல்'—என்று பெரியார் கூறுவாரானுல், 'இந்த நாட்டில் ஆளுவோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலே வேண்டாம் — கூடாது' என்று கூறட்டும்.

"அதுகூட வேண்டாம்; பெரியார் அவர்கள், 'நடைபெறுகிற தேர்தலில் எவரையும் நாங்கள் ஆதரிக்கமாட்டோம்' என்று உறுதி கூறட்டும்; 'தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது' என்ற முடிவை புனர்பரிசீலனை செய்யுமாறு நான் கேட்கிறேன்.

"'தேர்தலும் நடைபெறும்; அதில் பலரும் கலந்துகொள்வார்

(4-ம் பக்கம் பார்க்க)

'மந்திரிகள் கார் மூலம் அபினி கடத்தப்படுகிறது'

மத்திய பாரத் சட்டசபையில் குற்றச்சாட்டு

இந்தூர், ஆக. 28—

மத்திய பாரத் மந்திரிகளின் கார்களும், இதர சர்க்கார் வண்டிகளும் இதர மாநிலங்களுக்கு அபினி கடத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றனவாம்!

மத்திய பாரத் சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் இதுபோல குற்றம் சாட்டியிருக்கிருர்.

"இதுபோன்று பொதுப்படையாகக் குற்றம் சாட்டிப் பயனில்லை; இன்னருடைய காரில் அபினி கடத்தப்படுகிறது என்று அடையாளம் காட்டி உறுப்பினர் குற்றம் சாட்டினுல் விசாரிப்பதற்கு உதவும்" என்று, குற்றச்சாட்டை மறுத்து உள்நாட்டுத் துறை மந்திரி நரசிங்கராவ் தீட்சித் என்பார் கூறியிருக்கிருர்.

அபினி கடத்தக் கார் தரும் மந்திரிகளின் பெயர்களைக் கூறுமாறு உள்நாட்டு மந்திரி கேட்டபோது, அவகாசம் தருமாறு குற்றம் சாட்டிய எதிர்க்கட்சி உறுப்பினர் கேட்டிருக்கிருர்.

சர்மா என்ற அந்த உறுப்பினர், மூவர்ணக் கொடியின் நிரை மறைவில, மத்திய பாரத்திலிருந்து இதர மாநிலங்களுக்கு அபினி கடத்தப்படுவதாகக் கூறினுர்.

பதிவு பெருத அரசாங்க ஊழியர்களின் கண்களைத் துடைக்கப் பகட்டான முயற்சி!

'விலைவாசிப் படி' அமைப்பு முறையை ஆராயக் குழுவாம்!

கிடைக்கும் நிதி வசதிக்கு ஒப்ப புதிய சிபாரிசாம்!

பதிவுபெருத அரசாங்க ஊழியர்களின் 'விலைவாசி கிராக்கிப்படி'யின் அமைப்பை ஆராய்ந்து, கிடைக்கக்கூடிய நிதி வசதிக்கேற்ப அதனைத் திருத்துவதில் முயற்சி எடுத்துக்கொள்ள சென்னை அரசாங்கம் ஒரு மூவர் குழுவை நியமித்து இருக்கிறது.

அரசாங்கத் தலைமைச் செயலாளர் சத்தியநாதன், வரிக்குழு உறுப்பினர் இராகவன், நிதித்துறைச் செயலாளர் வர்கீஸ் ஆகிய மூவரும் மேற்படி குழுவின் உறுப்பினர்களாவர்.

அக்குழுவினர் ஏதாவது சிபாரிசு செய்வார்களா? ஏதாவது சிபாரிசு செய்தாலும், பதிவுபெருத ஊழியர்களின் கோரிக்கையைக் குறைந்தபட்சமாவது ஈடுகட்டும் வகையில் அது இருக்கமுடியுமா? அக் குழுவினர் ஏதாவது சிபாரிசு செய்தால், அது தங்களுக்கு மனநிறைவு அளிக்கக் கூடாததாய் இருந்தபோதிலும், 'ஏதோ கிடைத்ததுபோதும்' என்ற நினைப்பில், அதை ஒப்புக்கொள்ள அரசாங்க ஊழியர்கள் முன்வருவார்களா?—எல்லாம் புதிராக இந்த நிலையில் இருந்துவருகிறது.

★

கிராக்கிப்படியை மட்டுமேனும் உயர்த்த வற்புறுத்தல்

சென்னை மாநில கெசட் பதிவு பெருத அதிகாரிகளுக்குக் கிராக்கிப்படி கொடுப்பது குறித்து, சென்னை சர்க்கார் காரியாலயச் சங்கத்தின் 5 பிரதிநிதிகள் முதலமைச்சர் காமராசரைச் சந்தித்து, என். ஜி. ஓ.-க்களுக்குத் தரப்படும் கிராக்கிப் படியை அதிகப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். மேலும், என். ஜி. ஓ.-க்களுக்குத் தரப்படும் நிவாரணம் அடையாளபூர்வமாக இல்லாமல் கணிசமாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்!

'கம்யூனிஸ்டுப் போலந்திலுள்ள தொழிலாளிகளுக்கு வேலை நிறுத்தம் செய்யும் உரிமை கிடையாது' என போலந்து தொழில் சங்கங்களின் தலைவர் கூறியுள்ளார்.

மத வைதீகம் சரிகிறது!

சென்னை அரசாங்கக் கடனுக்கு ஆலயங்களின் உபரி நிதி

திருச்சி மாவட்டக் கோயில்கள் சார்பில் ரூ. 8 இலட்சம் முதலீடு

திருச்சி, ஆக. 29—

சென்னை அரசாங்கம் கோரி இருக்கும் ரூ 12·5 கோடி கடனுக்கு, திருச்சி மாவட்டக் கோயில்களின் சார்பில் ரூ 8 இலட்சம் வரையில் முதலீடு செய்யும்படி, சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறைத் தலைவர் கட்டளை பிறப்பித்து இருக்கிருர்.

அந்தக் கட்டளைக்கிணங்க, அம் மாவட்ட அறநிலையத் துறைத் தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள முனைந்துள்ளார்.

மேற்படி தொகையில் பெரும் பகுதியை ரொக்கமாகவும், ஆலயங்கள் சார்பில் பாங்கியில் போடப்பட்டுள்ள நிரந்தர சேமிப்புப் பணத்திலிருந்தும் ஈடுசெய்வதென முடிவுகட்டியுள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 31—8—'56 வெள்ளி

பிணியாளி பிழைக்கவில்லை!

'அறுவை வெற்றி பெற்று விட்டது; ஆனல் பிணியாளன்தான் பிழைக்கவில்லை.'

இப்படி ஒரு பழமொழி ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது. இதை மெய்ப்பிக்கும் நிலையில்தான் பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாயின் உண்ணு நோன்பும் முழு வெற்றி பெற்றிருக்கிறது.

இரு மொழி பம்பாய் மாகாண ஏற்பாட்டிற்கு மக்கள்சபை இணங்கியது அறிய வந்ததும், குஜராத்தி மொழியினர் கொதித்தெழுந்தனர். அகமதாபாத் நகரில் அமைதி குலைந்தது. மகா குஜராத் தேவை என்ற உரிமை முழக்கம் விண்ணதிர எழுந்தது.

காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்குக் குலைநடுக்கங்கண்டது. மக்கள் மத்தியில் அவர்கள் தலைகாட்டுவதே இயலாமல் போயிற்று. கதர்க் குல்லாய் அணிந்துகொண்டிருப்பது ஒன்றே, குஜராத்திய மக்களின் சிற்றத்தைக் கிண்டிவிடுவதற்குப் போதுமானது என எண்ணக்கூடியவகையில் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்குச்சரிந்து விட்டது.

காங்கிரஸ் கட்சியின் செல்வாக்குத் தொலைந்த அதே வேகத்தில், மற்ற எதிர்க் கட்சிகளின் செல்வாக்கும் ஓங்கி வளர்ந்தது. காங்கிரஸ் தலைவர்களைத் தங்கள் பகைவர்களெனக் கருதி, வெறுத்து ஒதுக்கும் நிலை குஜராத்தில் உருவாகத் தொடங்கிவிட்டது. தங்கள் ஒப்பற்றத் தலைவரெனக் கொண்டாடப்பட்டுவந்த மொரார்ஜி தேசாயைக் காண்பதும், அவர் பேச்சைக் கேட்பதும் அறவே கூடாது என்று எண்ணுகின்ற எல்லைக்குக் குஜராத் மக்கள் வந்துவிட்டனர்.

குஜராத் மக்களின் அன்பிற்கும் பேராதரவிற்கும் அதுவரை பாத்திரமாக இருந்துவந்த தம்மை அம்மக்கள் வெறுத்து ஒதுக்கினதைக் கண்டதும், பேச்சைக் கேட்கக்கூட மனமில்லாது கட்டுப்பாடாகக் கூட்டத்தில் தலைகாட்டாது இருந்துவிட்டது கண்டதும், சொல்லொணுத் துயரமும் தமது எதிர்கால அரசியல் அந்தஸ்து பற்றிய அச்சமும், மொரார்ஜி தேசாயின் இருதயத்தை சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டன. அந்தத் தன்னல அரசியல் ஆதிக்க வெறியை உள்ளடக்கிக் கொண்டு, தம்மை வெறுத்து ஒதுக்கிவிட்டுச் சென்றுவிட்ட குஜராத்திய மக்களின் ஆதரவை மீண்டும் எப்படியாவது பெற்றுத் தீரவேண்டும் என்ற முனைப்பில், தம் பேச்சைக் கேட்க குஜராத்தியர்கள் முன்வருகின்ற வரையில் உணவருந்தப் போவதில்லை எனச் சண்டித்தனம் செய்ய தேசாய் துணிந்துவிட்டார்.

தம் பேச்சைக் கேட்கக் குசராத்தியர்கள் முன்வருகிற வரை உண்ணப்போவது கிடையாது என உரைத்த அதே நேரத்தில், பலாத்காரச் செயல்களை அம்மக்கள் விட்டொழிக்கும்வரையிலும் உணவு உட்கொள்ளப்போவது கிடையாது எனக் கூறியதுடன், குசராத் மடிவதற்கு முன் தாம் தற்கொலை செய்துகொண்டு சாகத் துணிந்துவிட்டதாகவும் தேசாய் கூறுரைத்தார்.

எண்ணி எட்டு நாட்கள் தேசாய் பட்டினி கிடந்தார். பண்டித நேரு முதல் காங்கிரஸ் தலைவர்கள் பலரும் தேசாயின் தற்கொலை முயற்சியைப் பாராட்டினர். புனித காந்திய வழி எனச் சிறப்பித்துப் பேசினர். ஏடுகள் பாராட்டிப் பத்திப் பத்தியாக எழுதின.

அதே மூச்சில், உண்ணு நோன்பைக் கைவிட்டுவிடும்படி தேசாயை வற்புறுத்தவும் தொடங்கினர். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் செய்தனர்.

தேசாய் உண்ணு நோன்பை மேற்கொண்ட அதே நேரத்தில், மக்கள்சபை முன்பும் வேறு இரண்டொரு இடங்களிலும் உண்ணு நோன்பில் ஈடுபட்ட சிலர்மீது, தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தார்கள் எனக் குற்றஞ்சாட்டி, வழக்கும் தொடுத்திருக்கிறது அரசாங்கம். அதே அரசாங்கத்தின் பாதுகாவலராகவும் வழிகாட்டியாகவும் இருக்கும் பிரதமர் நேருதான், தற்கொலை செய்துகொண்டு செத்து மடியப்போகிறேன் என வெளிப்படையாகக் கூறிவிட்டு உண்ணை மறுத்துக் கிடந்த தேசாயை, 'உண்ணுவீர்! உண்ணுவீர்!' என உபசரித்தார்! 'கைவிடுமின்! கைவிடுமின்!' எனக் கனிமொழி புகன்றார். நிற்க,

எட்டு நாட்களுக்குப் பின்னர் காங்கிரஸ் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. முன்னர் முடிவுப்படியே தேசாயும் அக்கூட்டத்தில் பேசினர். அரிய முயற்சியின் விளைவாக பல்லாயிரக்கணக்கான மக்களும் அவர் பேச்சைக் கேட்க அங்கு கூடி இருந்தனர்.

ஆனல் அக்கூட்டத்திலும் குழப்பம் ஏற்பட்டது. பலாத்காரச் செயல்கள் தாண்டவமாடின. போலீஸ் படையும் தனது கைவரிசையைக் காட்டி நின்றது. உண்ணு நோன்பு வெற்றி பெற்றுவிட்டதாகவும், தாம் பெருமகிழ்வு எய்துவதாகவும் தேசாயும் கூறிக்கூறி பூரிப்படைகிறர்.

வெற்றிக்களை முகத்தில் தெரிய, ஆடம்பர வரவேற்புடன் தேசாய் பம்பாய் நகருக்குத் திரும்பியும் விட்டார்.

தேசாய் மேற்கொண்ட உண்ணு நோன்பால் ஏற்பட்ட உருவான பலன் என்ன என்பது சிந்திக்கத்தக்கது.

குஜராத்திய மக்களிடத்தில் தாம இழந்துவிட்ட செல்வாக்கை மீண்டும் தேசாய் பெற்றுள்ளார்; அதன் மூலம் அவர் தமது எதிர்கால அரசியல் ஆதிக்கத்திற்கு வழிசெய்து கொண்டார் என்பதைத் தவிர்த்து, வேறு எந்த நற்பலனும் குசராத் மக்களுக்கு ஏற்படவில்லை. பலாத்கார உணர்விலிருந்து குசராத் மக்களை மீட்பதற்காகவே தாம் உண்பதை ஒழிப்பதாகக் கூறிய தேசாயின் குறிக்கோள் இன்றும் வெற்றி பெருமல்தான் இருந்து வருகிறது. பரவலாக இருந்து வந்த பலாத்கார உணர்வு குறுகியும், தீவிரத்தில் குறைந்தும் இருக்கிறது என்று வேண்டுமானால் கூறலாமே அல்லாது, அவ்வுணர்வை குசராத் மக்கள் அறவே கல்லி எறிந்துவிட்டார்கள் எனக் கூறுவதற்கில்லை.

இதை எண்ணும்பொழுதுதான், தலைப்பில் குறிப்பிட்டப் பழமொழி நமக்கு நினைவுக்கு வருகிறது.

'இழந்த செல்வாக்கைப் பெறுவதில் தேசாய் முழு வெற்றி பெற்று விட்டார்; ஆனல், பலாத்கார உணர்வோ குசராத் மக்களை விட்டுத் தொலையாமல் இருந்து வருகிறது!'

'மைசூர் தென் மண்டலத்திலிருந்து பிரிக்கப்பட்டதேன்?'

'அகமதாபாத் சம்பவங்கள் இந்திய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டுகளா?'

சென்னையில் என். வி. நடராசன் முழக்கம்

சென்னை சேத்துப்பட்டு, புளியந்தோப்பு, தேனும்பேட்டை வட்டங்களில் கடந்த 25, 26, 27-ந் தேதிகளில் நடைபெற்ற மூன்று கூட்டங்களிலும் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் இங்கு தரப்படுகிறது:—

"காமராசர் நம்மவர்—ஆகவே நல்லவர் என்று பேசுகிறர்கள்; ஆனல் அவர், நாட்டு மக்களுக்குத் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் ஆற்றிய பணி என்ன?

"ஆச்சாரியார் பதவியிலிருந்த காலத்திலாகிலும், சென்னை நகரம் எங்களுக்கே வேண்டுமென்று கோரிய ஆந்திரர்களிடத்திலிருந்து சென்னை நகரத்தைக் காப்பாற்றினர்; 'சென்னை தமிழருக்கே' என்று உறுதி செய்தார்.

"ஆனல் காமராசர் செய்தது என்ன? மாநிலப் புது அமைப்பு விவகாரத்தில் தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ் வட்டங்கள் தமிழ் நாட்டுடன் இணைவதற்குப் பாடுபடுவதற்கு மாறாகக் கோட்டை விட்டார்; அங்குள்ள தமிழர்களுக்குத் துரோகம் இழைத்தார்; கிடைத்த செங்கோட்டையில் பாதியையும் கேரளத்திற்குத் தந்து விட்டுத் திரும்பினர். இவர் எப்படி நம்மவராக இருக்க முடியும்?

"பிப்.20ல், தெற்குத் தமிழ்ப் பகுதிகள் தமிழ் நாட்டுடன் இணைய வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்காகத் தமிழ் மக்கள் ஒரு பெரும் கடையடைப்பு—வேலை நிறுத்தம் செய்தார்கள்; அதுபோது, தம்மம்பட்டியிலும் கள்ளக்குறிச்சியிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார; இவர் எப்படி நல்லவராயிருக்க முடியும்?

"காங்கிரஸ் ஆட்சியில் இன்று மக்கள் அனுபவிக்கும் வாழ்க்கை எப்படிப்பட்டதாயிருக்கிறது?

"வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் கவர்னர்-ஜெனரல் ஊர்வலம் வந்தால் அதற்காகச் செலவிடப்படும் பெரும் தொகைகளைச் சுட்டிக்காட்டிக் கூச்சல் எழுப்பினர் அன்று காங்கிரசார்! மக்களின் வரிப் பணம்பாழாக்கப்படுவதற்குக் கண்டனம் எழுப்பினர்! சரி, ஆனல் இன்று என்ன நிலை?

"ஜனதிபதி இராசேந்திர பிரசாத் சென்னை நகரில் பவனி வந்ததற்கு எத்தனை இலட்சம் பாழடிக்கப்பட்டது? வெள்ளையர் காலத்தில்கூட இல்லாத அளவு, ஒரு அடிக்கு ஒரு போலீசார் வீதம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனரே! இப்படி நான்கு நாள் ஐந்து நாள் சென்னை நகரைப் போலீஸ் மயமாக்கி, மக்கள் நடமாட்டத்திற்குப் பயமுறுத்தினர்களே இந்தப் பாரத புத்திரர்கள்! ஜனதிபதி ஊர்வலத்திற்காக இலட்சக்கணக்கில் பாழாக்குவதற்குப் பணம் இருக்கிறது இந்த சர்க்காரிடத்தில்; ஆனல் போலீசாரோ, சர்க்கார் ஊழியரோ பசிக்கும் வயிற்றைக் காட்டி 'கொஞ்சம் சம்பளம் உயர்த்துங்கள்' என்று கேட்டால் பணம் இல்லாது போய்விடுகிறது, இந்தக் காங்கிரஸ் சர்க்காருக்கு!

"அமைக்கப்படவிருக்கிற தென் பிராந்திய மண்டலத்தில்தான் மைசூர் மாநிலம் இருக்கும் என்று தான் முதலில் அறிவித்திருந்தனர்; ஆனல் பின்னர், திடீரென எவரும் அறியாமல் ஒரு திருத்தம் செய்து மைசூரை தென்மண்டலத்திலிருந்து பிரித்து மேற்கு மண்டலத்தில்—பாம்பாயுடன் இணைத்திருக்கிறது இந்தியப் பேரசு! எல்லா வகையாலும் மைசூர் மாநில மக்களான கன்னடியர், ஆந்திர—கேரள—தமிழக மக்களுடன் மிக நெருங்கிய தொடர்புகொண்டவர்களாயிருந்தும், தொடர்பே இல்லாத பம்பாயுடன் மைசூரை இணைத்தது நியாயம் என்று எவர் கூறுவர்?

"இந்தியாவின் ஒற்றுமை பற்றிப் பேசுகிறர்கள்; இப்போது வடநாட்டில்—பம்பாயிலும் மராட்டியத்திலும், குஜராத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம்பவங்கள் எதைச் சொல்லுகின்றன? இந்தியாவின் ஒற்றுமையைப் பற்றியா?

"அமதாபாத் சம்பவங்கள், மொரார்ஜியையோ, அல்லது வேறெவரையோ பெரியவர் எனக் குஜராத்தி மக்கள் கொள்வதாக இல்லை என்பதைத்தானே! இதை எல் இங்குள்ள தேசியத் தோழர்கள் சிந்திக்கலாகாதா?

"தமிழ்நாடு என்று தமது தாயகத்திற்குப் பெயரிடவும் கூசுபவர்களாகவா இங்குள்ள தேசியத் தோழர்கள் இருக்கவேண்டும்?

"தமிழ் ஆட்சிமொழியாகவேண்டும்; தமிழ்நாடு தமிழருக்கே—என்று நாங்கள்தான் முதன் முதலில் கூறினேம்; அன்றெல்லாம், 'எலி வலை எலிகளுக்கே' என்று கேலிபேசினர்கள். ஆனல் இன்று ...? நமது பணி வெற்றிப் பாதையை நோக்கிச்செல்வதை நாம் காண்கிறேம்.

"எனவே நாட்டுமக்கள் அனைவருக்குள்ளும் 'நாம் தமிழர்—திராவிடர்; நமது நாடு திராவிட நாடு—அந்த நாடு திராவிடருக்கு ஆகவேண்டும்'—என்ற எண்ணம் வெகு விரைவிலேயே பிறந்தாக வேண்டும்."

'கிடைத்த ஒரே கல்லூரியும் சுலபத்தில் கிடைத்துவிடவில்லை'

'சர்க்கார் காட்டும் காரணங்கள் விசித்திரமானவை'

'மத்திய சர்க்கார் போக்கு தென்னவருக்கு நியாயம் வழங்குவதாயில்லை'

"தொழில் நுட்பப் பயிற்சி விஷயத்தில் மத்திய சர்க்கார், தென்னுட்டுக்கு நியாயம் வழங்கவில்லையெனத் தென்பிராந்தியக் கல்வி மாநாடு வருத்தம் தெரிவித்துள்ளது. இது எதிர்பார்க்கக்கூடியதுதான். ஏனெனில், இரண்டாவது திட்டக் காலத்தில், சர்க்கார் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள 18 எஞ்சினீயரிங் கல்லூரிகளில் 17 கல்லூரிகள் வடநாட்டில்தான் துவக்கப்பட இருக்கின்றன. தென்னுட்டிற்கு ஒதுக்கப்பட்டிருப்பது ஒன்றே ஒன்று. இந்த ஒன்றும் சுலபமாகக் கிடைத்துவிடவில்லை முதலில் தென்பிராந்தியத்தில் ஒரு கல்லூரியைக் கூடத் துவக்குவதில்லை என்றுதான் அவர்கள் முடிவு செய்திருந்தார்கள். என்றுலும், இங்கிருந்து கிளம்பியக் கண்டனங்களும் ஆட்சேபணைகளும் சர்க்கார கொள்கையைப் புனராலோசனை செய்ய வைத்திருக்க வேண்டும். அதன் பிறகே, அவர்கள், இந்த ஒற்றைக் கல்லூரிக்கு அனுமதி வழங்கியிருப்பதாகத் தோன்றுகிறது.

'தென்னுட்டில் அதிகக் கல்லூரிகள் துவக்குவதற்குச் சர்க்கார் தரப்பில் கூறப்படும் காரணங்கள் விசித்திரமானவை. வடநாட்டில்தான் கனரகத் தொழிற்சாலைகள் அதிகம் இருக்கின்றனவாம், ஆகையால் அங்கேதான் எஞ்சினியர்களுக்குத் தேவையும் அதிகமாம். இந்தக் காரணத்தை முன்னிட்டே வடநாட்டில் அதிகம் கல்லூரிகளைத் துவக்குவதாக அவர்கள் சொல்லுகிறர்கள்.

"ஆனல் இந்த வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல; ஒருவேளை, ஒரு குறிப்பிட்டப் பெருந்தொழிலை ராஜ்ய சர்க்கார் ஆரம்பித்து, அதற்காகத் தமது பிரதேசத்திலேயே ஒரு கல்லூரியையும் துவக்குவார்களாகில், அவர்கள் இவ்விதச் சமாதானம் கூறுவதில் அர்த்தமிருக்கிறது. ஆனல் கனரகத் தொழில்கள் யாவும் அவை தென்னுட்டில் இருந்தாலும் சரி, வடநாட்டிலிருந்தாலும் சரி, மத்திய சர்க்காருக்கே சொந்தமாக உள்ளன. அகில இந்திய ரீதியான இத்தொழில்களுக்கு உயர்தர உத்தியோக நியமனங்களில் அகில இந்திய அடிப்படையிலேயே அவர்கள் கையாளவும் கடமைப்பட்டிருக்கிறர்கள்.

"ஆனல் மத்திய சர்க்கார் போக்கு ஆரம்பத்தில் சொன்னது போலத் தென்னுட்டினருக்கு நியாயம் வழங்குவதாயில்லை. தென் பிராந்தியத்தில் போதுமான கல்லூரிகளைத் துவக்காததால், இங்குள்ளவர்கள் வடநாட்டுத் தொழிற்சாலைகளில் அதிகம் பதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைகின்றன. இந்நிலை மாறவேண்டும்."

என்று, 29—8—56 'நவ இந்தியா' இதழ், தனது தலையங்கத்தின் ஒரு பகுதியில் குறிப்பிட்டுள்ளது.

'டெலிவிஷன்' விற்பனை அதிகரிக்கிறதாம்!

நியூயார்க்—

எடுத்துச் செல்லக்கூடிய 'டெலிவிஷன்' செட்டுக்கள் விரிவான முறையில் பொதுமக்களால் அங்கீகரிக்கப்படுவது, தொழில் அபிவிருத்தி அடையச் செய்கிறதாம்,

கழகச் செய்திகள்

அ. மேட்டூரில் தி. மு. கழக பொதுக்கூட்டம்

போதுச்செயலாளர் உரை

21—8—56 மாலை, அ. மேட்டூரில், கிளைக் கழகச் சார்பில் சிறப்பான முறையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார். தோழர் எஸ். அப்பாவு சிறிது நேரம் பேசியதும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நீண்டதோர் உரை நிகழ்த்தினார். கிளைக் கழகச் செயலாளர் நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

விருத்தாசலத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

19—8—56 மாலை 6 மணியளவில் விருத்தாசலம் மணிமுத்தா நதி மணற்பரப்பில், தோழர் வி. முனுசாமி தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன், எ. கோவிந்தசாமி எம். எல். ஏ., சிற்றுளி-சுப்பிரமணியம், கே. ஜி. சாமிநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திண்டிவனத்தில் கழகப் பொதுக்கூட்டம்

26—8—56-ல், திண்டிவனம் தி. மு. கழகச் சார்பில், நகர்மன்ற உறுப்பினர் தோழர் எஸ். நடராசன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் டி. கே. சீனிவாசன், காங்கிரஸ் ஆட்சியின் போக்கைக் கண்டித்து சொற்பொழிவாற்றினார். தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. சென்னை அரசாங்கத்தின் ஊழல்களைப்பற்றி சொற்பொழிவாற்றினார்.

விழுப்புரத்தில் கழகப் பொதுக்கூட்டம்

24—8—56 மாலை விழுப்புரம் தி. மு. கழகச் சார்பில் மந்தகரை மைதானத்தில் தோழர் ஏ கோவிந்தசாமி எம்.எல்.ஏ, தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாநில மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கி தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

மணப்பாறையில் கழகப் பொதுக்கூட்டம்

26—8—56 மாலை 6 மணிக்கு பழைய சந்தைத் திடலில் தோழர் பொ. மதிவாணன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், காசிநாதன், தமிழழகன், வடிவேலன் ஆகியோர் பேசினர். அன்று காலை நடைபெற்ற தோழர் வாசுதேவன் திருமணவிழாவில் தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், காசிநாதன், முத்துகிருஷ்ணன், மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பாலம் ராசாக்கப்பட்டியில் தி. மு. க. துவக்க விழா

19—8—56ல், திண்டுக்கல் அடுத்த பாலம் ராசாக்கப்பட்டியில் தோழர் நா. முத்துசாமி தலைமையில் கிளைக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் சிறப்புற நடைபெற்றது. தோழர் ஏ. சங்கையா கழகக் கொடி ஏற்றினார். தோழர்கள் என். முத்து என் டி. வேலன், க. சோ. அரசு, எஸ் ஏ. இராசன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும், சர்க்காரின் வரி முறைகளைப் பற்றியும் விரிவுரையாற்றினர். தலைவர் முடிவுரைக்குப் பின் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

பாலையக்கோட்டை கழகத் துவக்க விழாக் கூட்டம்

26—8—56 மாலை 6 மணிக்கு தோழர் இரா. அரசமாணிக்கன் தலைமையில் மேற்படி விழா நடைபெற்றது. தோழர்கள் வீர. செயராமன், பி. பெத்தக்கண்ணு, நாகரத்தினம், நடராசன், அன்பழகன், நா. மாணிக்கம், ந. தர்மலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மறவாமடத்தில் தி. மு. கழகத் திறப்பு விழா

19—8—56 இரவு 7 மணிக்கு மறவாமடத்தில் தி. மு. கழகக் கிளை ஒன்றை நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் திறந்து வைத்தார். தோழர்கள் எம். எஸ். சிவசாமி, ஜோசப், ஆ வேலாயுதம், சே. தாளமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் சுப்பய்யா நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

சென்னை—39-வது வட்ட தி. மு. கழகம்

12—8—56 காலை 10 மணிக்கு மேற்படி கிளைக் கழக உறுப்பினர் கூட்டம், சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது, கிளைக் கழகப் புது நிர்வாகிகள்தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் என். கிருட்டிணன், தெ. இராசேந்திரன், பி. எம். துளசிங்கம் ஆகியோர் முறையே செயலாளர்; துணைச் செயலாளர், பொருளாளராகவும், தோழர்கள் என் கிருட்டிணன்; மா. மோகன் ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இவர்கள் உட்பட 15 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அனவரதநல்லூர் தி. மு. கழகம்

26—8—56-ல், தோழர் அப்பாதுரை இல்லத்தில், தோழர் பி பொருனைமணன் தலைமையில் நடைபெற்றக் கிளைக் கழகச் செயற்குழுக்கூட்டத்தில், செப்டம்பர் 17-ந் தேதியன்று கழகத் துவக்க விழா நடத்துவதென்றும், மற்றும் பொதுத் தேர்தல் நடவடிக்கைகள் குறித்தும் முடிவு செய்யப்பட்டது

கிழப்பாவூர் தி. மு. கழகம்

19—8—56 இரவு 8 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் ஏ. ராமநாதன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மதுரை நகர தி. மு. கழகம்

26-8-56 காலை 10 மணிக்கு தோழர் பி. கே. சேதுராமன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கி. மனோகரன் அவர்கள் தந்தையார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், செப்டம்பர் 16-ல் 'திராவிட நாடு' பிரிவினை நாளை விமரிசையாகக் கொண்டாடுவது என்றும், ஆங்காங்குள்ள கழகத்தைச் சார்ந்த படிப்பகங்கள் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் எனறு கேட்டுக்கொண்டும், சிறப்பாகக் கொண்டாடும் படிப்பகங்களுக்கு நகர் கழகத்தின் சார்பில் வெள்ளிக் கோப்பைகள் பரிசு அளிப்பதென்றும் தீர்மானிக்கப் பட்டது. சிறப்பாக கொண்டாடும் படிப்பகங்களைத் தேர்ந்தெடுக்கும் நடுவர்களாகத் தோழர்கள் எஸ் முத்து, வ. இராவணன், கே. எஸ். சந்தானம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரிவினை நாள் விழாக் கூட்டத்திற்கு முக்கியச் சொற்பொழிவாளர்களை அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை 28-வது வட்ட தி. மு. கழகம்

26—8—56 காலை 11 மணிக்கு தோழர் ம. அ. நாதன் இல்லத்தில் தோழர் கே. திருவேங்கடம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் குருநாதன், கே, கோவிந்தசாமி, கே. சண்முகம். பாலுசாமி, கே. திருவேங்கடம், வெங்கோபன், நல்லதம்பி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தூத்துக்குடி நகர் தி. மு. கழக தேர்தல்

12—8—56ல் தூத்துக்குடி நகர மன்றத்திற்கு எதிரிலுள்ள மாம்பழப் பேட்டையில் நகர தி. மு கழகக் கிளைத் தேர்தல், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் நடைபெற்றது. செயலாளராகத் தோழர் ஜோசப் அவர்கள் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். துணைச் செயலாளராகத் தோழர் கே. ஆர். கிருஷ்ணன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர்கள் செல்லப்பா, இளஞ்செழியன், இங்கர்சால் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தோழர்கள் கே. வி. கே. சாமி, ஜோசப் ஆகியோர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

பொன்மலைப்பட்டி தி. மு. கழகம்

21—8—56 மாலை 7 மணிக்கு தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கிளைக் கழக 3-வது ஆண்டுவிழாவை வரும் செப்டம்பர் மாதம் மூன்றுவது வாரத்தில் நடத்துவதென்றும், அதற்குத் தோழர்கள் பாண்டியன் (கன்வீனர்) கே. ராமலிங்கம், கே எஸ். தட்சணாமூர்த்தி, டி. அப்பாதுரை, ஏ. கருப்பையா ஆகியோரை விழாக் குழுவினராகத் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது.

பொன்னேரி வட்ட தி. மு. கழகம்

19—8—56 மாலை 5½ மணிக்கு பொன்னேரி வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், செயலாளர் தலைமையில் நடைபெற்றது. 20-11-55 முதல், 19-8-56 வரையுள்ள வட்டக் குழு வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், அடுத்த செப்டம்பர் திங்களுக்குள் வட்டக் கழகச் சார்பில் தி. மு. க. 8-ம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தொடையூர் தி. மு. கழகம்

24—8—56—ல், தொடையூர் (திருச்சி மாவட்டம்) தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. செயலாளர் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்: மு. செங்குட்டுவன்; துணைச்செயலாளர்: சண்முகம்; பொருளாளர்: இரா. நடராசன்; மாவட்ட உறுப்பினர்: துரை மதிவாணன்.

தம்மம்பட்டி தி. மு. கழகம்

10—8—56 மாலை 3 மணிக்கு ஒய். ஆர். கோபால் லாரி செட்டில் தோழர் எஸ். கே. அப்துல்காதர் தலைமையில் நடைபெற்றக் கழக உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் ஏ. அப்துல் மஜீத், பி. சேர்மை விரும்பி, கே. இரங்கசாமி, ஒய்.ஆர். கோபால், எஸ். மரிய ஆரோக்கியம், ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, பொருளாளர், விளம்பர உறுப்பினராகவும், இவர்களுடன் தோழர்கள் எஸ். கே. அப்துல் காதர், ஏ. நரசிம்மன், டி. கே. பி. சாமி, பி. காத்தன், எம். ஏ. அப்துல் ரசாக், கே. விசுவநாதம் ஆகியோரடங்கிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. இறுதியில் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

திருவனந்தபுரம் தி. மு. க.

25—8—56-ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கி. மனோகரன் அவர்களின் தந்தையாரின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்தும், கேரள திராவிட முன்னேற்றக் கழகக் குழு அமைப்பதுபற்றிய முன் தீர்மானத்திற்குக் கேரளப் பகுதிகளிலிருந்து கடிதம் மூலம் ஆதரவுகள்வந்தவண்ணமிருப்பதால் அது குறித்துக் கேரளத்திலுள்ள தி. மு. கழகக் கிளைகளை நேரில் கண்டு கலந்து ஒரு முடிவுக்குவர திருவனந்தபுரத்திலிருந்து ஒரு தோழரை கூடிய விரைவில் அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பம்பாய்—பாண்டுப் தி. மு. கழகம்

15—8—56 காலை 10 மணியளவில், பாண்டுப் தி. மு. கழகத் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: கே. எஸ். அய்யா; துணைச் செயலாளர்: எம். ஈசாக்கு; பொருளாளர்: கே. செல்லபாண்டி. செயற்குழு உறுப்பினர்கள்: வி. தேவதாஸ், எஸ் ராசமணி, கே. முத்துசாமி, கே எசுமரியான், ஆர். ஏ. ராசன், எம். எம். டேவிட், என். கோவிந்தசாமி, ஆர் தாசன், எஸ். வெங்கிடாசலம். மாவட்டப் பிரதிநிதிகள்: ஆர். ஏ. ராசன், வி. தேவதாசன். தேர்தல் அதிகாரியாகத் தோழர் எம். எம். டேவிட் அவர்கள் இருந்து தேர்தலை நடத்தி வைத்தார்.

பின்னர், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் தோழர் கே. எஸ். அய்யா, முன்னுள் செயலாளர் வி. தேவதாசன் அவர்களின் கடந்தகாலத் தொண்டினைப் பாராட்டியும், செயற் குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பைக் கோரியும், தேர்தலை சிறப்புடன் நடத்தித்தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தும் உரை நிகழ்த்தினார்.

பம்பாய்—தாணா தி. மு. க.

15—8—56 காலை சுமார் 10-30 மணியளவில் மேற்படி கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் எம். இராசகோபால் தலைமையில் நடைபெற்றது. அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் செயலாளர்: டி. செல்லவாணன்; துணைச் செயலாளர்: வி. நம்பி; பொருளாளர்: சி. எல். பதி. செயற்குழு உறுப்பினர்கள்: எம். இராசகோபால், ஆர். நம்பிநாராயணன், சி. ஆர். அய்யா, எஸ். சுந்தரம், டி. எஸ். மணி, பி. மாடசாமி.

பம்பாய் தி. மு. கழக் மத்தியக் குழுக்கூட்டம்

11-8-56 மாலை 7-30 மணியளவில், தாராவி திராவிடரகத்தில் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், அகமதாபாத், பம்பாய் ஆகிய இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்துவது என்றும், மத்தியக் குழுத் தோழர்கள் ஒவ்வொருவரும் ரூ. 5 நன்கொடையாகத் தரவேண்டும் எனவும், பொதுக்கூட்டச் செலவிற்குப், பொதுமக்களிடம் நன்கொடை வசூலிப்பது எனவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பம்பாய் தி. மு. கழக பொதுஉறுப்பினர்கூட்டம்

21-8-56 பிற்பகல் 3 மணியளவில், மாதுங்கா போதார் கல்லூரியில் மத்தியக் குழுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. மத்தியக் குழு உறுப்பினர்களும் தனி அழைப்புப் பெற்றவர்களுமாகச் சுமார் 85 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடமிருந்து வரப்பெற்ற அஞ்சல்கள் படித்துக் காண்பிக்கப்பட்டு நீண்டதோர் விவாதத்திற்குப் பின்னர் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பம்பாய்—தாராவி தி. மு. கழகம்

26-8-56 மாலை 7 மணியளவில், 'திராவிடரக'த்தில் தோழர் த. மு. பொற்கோ தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் மத்தியக் குழுப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் எஸ். தியாகராசன், பி. எஸ். செல்லையா, எல். நெல்லைச்செழியன், சி. த. மு. இர. ஆரியசங்காரன், சு. வள்ளிநாயகம், சு. தங்கையா, சு. தங்கவேலன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் சு தங்கையா அவர்கள் மீண்டும் படிப்பகப் பொறுப்பாளராகவும், தோழர் இரா. வளர்மதி அவர்கள் கழகத்தின் கையெழுத்துத் திங்கள் வெளியீடான 'முயற்சி' ஆசிரியராகவும், கிளைக் கழகத் தணிக்கையாளராகத் தோழர் எஸ். பாலு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், தோழர் கி. மனோகரன் அவர்களின் தந்தையார், தாராவி கழக உறுப்பினர் தோழர் பி. சாமிநாதன் அவர்களின் தந்தையார் ஆகியோர் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பம்பாய்—கொலாபா தி. மு. கழகம்

14—8—56 இரவு 9-30 மணியளவில், பம்பாய் — கொலாபா கூபரேஜ் திடலில், தோழர் எஸ். கே. இராசு தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகத் தேர்தலில், தோழர்கள் ஏ பி இ. ஆறுமுகம், க. சு. செகநாதன், கே. கே இராமநாதன், ஏ. எஸ். அன்பரசு, எஸ். கே. இராசு ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர்; பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகளாகவும், தோழர்கள் வி. பி. மாணிக்கம், டி. எம். தாஸ், என். சுந்தரராசு, ஏ. எஸ். இராசு, ச. தேவசகாயம், எல். எஸ். முத்து, மு. பே. வேலு ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

அகமதாபாத்—நரோடா தி. மு. கழகம்

25-8-56—ல் அகமதாபாத்—நரோடா தி. மு. கழகப் பணிமனையில் தோழர் கோ. பெரியசாமி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தோழர்கள் எம். ஏ. காதர்பாய், ஏ. செல்வராசு ஆகிய இருவரும் கழக சட்ட திட்டத்திற்கு முரணாக நடந்து கொண்டதையொட்டி அவர்களிருவரையும் விலக்கிவைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

****

தலைமை நிலையச் செய்தி:

மத்திய செயற்குழு

(Working Committee)

9—9—56 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு, சென்னை—இராயபுரம் 'அறிவக'த்தில், தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

****

காங்கிரஸ் தந்திரம் குறித்து அண்ணு

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

கள்; நானும், எனக்குப் பிடித்தமானவர்களை ஆதரிப்பேன்; ஆனல் நீ மட்டும் தேர்தலில் நிற்கக்கூடாது,' என்ருல் எனக்குப் புரியவில்லை!

"போன தேர்தலில் நடைபெற்றது என்ன? கோவை ஜி. டி. நாயுடு அவர்கள் மிக நல்லவர்தான்; எங்களுக்கு எல்லாம் மிக வேண்டியவர்தான்; அவர், காமராசரை எதிர்த்து மக்கள் சபைக்குப் போட்டியிட்டார்; ஆனல், நமது ஒப்பந்தப் பத்திரத்தில் அவர் கையொப்பமிடாததால் நாம் அவரை ஆதரிக்கவில்லை; வேறு ஒருவரை ஆதரித்தோம். ஜி. டி. நாயுடு அவர்கள் நல்லவர்—நமக்கு நண்பர் என்ற பிறகும், நாம் அவரை ஆதரிக்காமலிருந்தோமே, எதனல்? மக்கள் யோசித்துப் பார்க்கமாட்டார்களா?

"பெரியார் அவர்கள், 'காமராசர் நல்லவர்; அதனல் அவரை ஆதரிக்கிருேம்,' என்கிருர். இந்தத் தத்துவம் உண்மையானல், ஓமந்தூரார் முதலமைச்சர் பதவியில் இருந்தார்—அவர் என்ன கெட்டவரா? குமாரசாமி இராசா இருந்தார்—அவர் நல்லவர் இல்லையா? அல்லது யாரையாவது பொல்லாங்கு கூறினரா? இல்லையே!

"பின், குமாரசாமி இராசாவை ஏன் சென்ற தேர்தலில் ஆதரிக்கவில்லை? 'நல்லவரை ஆதரிக்கிருேம்' என்ற அரசியல் தத்துவம் உண்மையானல், குமாரசாமி இராசாவைச் சென்ற தேர்தலில் ஏன் தோற்கவிட்டிருக்கவேண்டும்?

'இராசபாளையம், இராசுக்கள் என்ற வகுப்பார் பிரதானமாக வாழும் நகரமாகும்; அங்கே போய் இன்னும் குமாரசாமி இராசாவையோ, அல்லதுவேறெவரையோ குறைத்துப்பேசிவிட்டு விர்துவிடமுடியாது; அவ்வளவு கட்டுப்பாடாக வாழும் சமூகம்; அங்குதான் குமாரசாமி இராசா அவர்கள் தேர்தலுக்கு நின்ருர். அவர் ஏன் தோற்ருர்? 'நல்லவரான இராசாவுக்குக் கெட்டுப்போன காங்கிரசில் என்ன வேலை?' என்று கேட்டு அங்குள்ள மக்கள், இராசாவைத் தோற்கடித்தார்கள்.

"எனவே, காமராசரை ஆதரிப்பதற்கு வேறு ஏதாவது வெளியில் சொல்லக்கூடிய காரணம் இருந்தால் பெரியார் சொல்லட்டும்; சொல்லக்கூடாத அரசியல் இரகசியம் என்ருல், அதை எல்லாம் அறிந்துகொள்ள நான் அருகனல்ல!

"ஒருவர் நல்லவர் என்பதற்கு இலக்கணம்தான் என்ன? அரசியலில் தன்னலம் கருதாது, நாட்டு மக்களின் நலனுக்காக—அவர்கள் சுகமான வாழ்வு பெறுவதற்காகப் பாடுபடுபவர்களை நல்லவர்கள் என்று கூறலாம்.

"இதை விடுத்து, 'அவருக்கு உத்தியோக உயர்வு கொடுத்தார். இவருக்குப் பதவி உயர்வு கொடுத்தார்'— என்பதாலேயே அவர் நல்லவர் என்ருல், இந்தப் பாழும் மனம் கேட்கவில்லையே! திருமாளர்கள் இராசரத்தினம், சுந்தரவடிவேலு ஆகியோருக்குப் பதவி உயர்வு கிடைத்ததால் நாட்டு மக்களுக்குக் கிடைத்தது என்ன? 'பதவி உயர்வு வாங்கித்தந்தேன்; வாங்கித்தந்தேன்' என்று கூறிக்கொண்டிருந்தால், ஏதோ, இராசரத்தினமும், சுந்தரவடிவேலும் அந்தப் பதவிகளுக்கே இலாயக்கற்றவர்கள்போலவும், காமராசர் பார்த்து அவர்களை அந்த நிலைக்கு உயர்த்தியது போலவும் பொருள்படாதா? இது அவர்களையே இழிவு படுத்துவதாக இல்லையா? இன்றில்லாவிட்டால் நாளை அந்தப் பதவிகளுக்கு வரக்கூடிய தகுதி படைத்தவர்கள்தானே இராசரத்தினமும் சுந்தரவடிவேலுவும்?

"சிலருக்கு உத்தியோக உயர்வு கொடுத்தார் என்பதாலேயே காமராசர் நல்லவர் என்ருல், சபாரத்தினம் என்ற ஒரு பார்ப்பனரல்லாதாரை ஆச்சாரியார் தனது அந்தரங்கக் காரியதரிசியாக வைத்துக்கொண்டிருந்தார்; எங்கேயோ மாவட்ட அதிகாரியாக இருந்த சபாரத்தினத்தை அந்த நிலைக்கு உயர்த்தி, இன்றும் அவர் சென்னையில் உயர்ந்த உத்தியோகத்தில்தானிருக்கிருர். இருந்தும் ஏன் ஆச்சாரியாரை வெறுக்கவேண்டும்? 'ஏஞ்சிக்குச் சர்க்கரை தருவதைப்போல ஆச்சாரியார், சபாரத்தினத்தை உயர்த்திவிட்டு ஏமாற்றப் பார்க்கிருர்; பார்ப்பன குழ்ச்சி இது,' என்று அப்போது பேசப்பட்டதே! அதே ஆச்சாரியார் ஜோதி அம்மையாரை மந்திரியாகவும் ஆக்கினரே!

"'காமராசர் ஆட்சியில் புதிதாக 60,000 பேருக்கு வேலை தரப்பட்டிருக்கிறது; விவசாயிகளுக்கு வாழ்வு தரப்பட்டிருக்கிறது; தொழிலாளரின் துயர் துடைக்கப்பட்டிருக்கிறது; மக்களின் வரிச் சுமையும் கடன் பளுவும் ஒழிக்கப்பட்டிருக்கின்றன'—என்று கணக்குக் காட்டினல், காமராசரை நல்லவர் என்று போற்றலாம். அதை விடுத்து, 'சிலருக்கு உயர்ந்த உத்தியோகம் கொடுத்தார்—அதனல் அவர் நல்லவர்' என்ருல், மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

நிதி மந்திரியாக

டி.டி. கிருஷ்ணமாசாரி நியமனம்

அமைச்சரவை இலாகாக்கள் மாற்றம்

புதுடில்லி, ஆக. 30—

சென்ற மாதம், இந்திய சர்க்கார் நிதி அமைச்சராக இருந்த தேஷ்முக் தமது பதவியை இராஜிநாமாச் செய்ததையொட்டி பிரதமர் நேருவே நிதி இலாகா பொறுப்பையும் ஏற்று நடத்திவந்தார். இப்போது, மத்திய தொழில், வர்த்தக உருக்கு, இரும்பு இலாகா அமைச்சராக இருந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள், மத்திய நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிருராம்.

இதுவரையிலும் டி. டி. கே. கவனித்துவந்த தொழில், வர்த்தக, உருக்கு, இரும்பு இலாகாக்களில் பின்கூறப்பட்ட இரண்டு இலாகாக்களின் நிர்வாகப் பொறுப்பும் தொடர்ந்து அவரிடமே இருந்து வருமாம்.

மற்ற இலாகாக்களில் கனரகத் தொழில் இலாகாவை உள்நாட்டிலாகா அமைச்சர் பண்டித பந்தும், அன்றாட உபயோகப் பொருட்கள், உற்பத்தித் தொழில்கள் (கன்சியூமர்) இலாகாக்களை மராமத்து விநியோக அமைச்சர் சர்தார் சுவரண்சிங்கும் உபரியாகக் கவனித்து வருவார்களாம்.

பிரதமர் நேருவிடமிருந்து நிதி இலாகா பொறுப்பை அமைச்சர் டி. டி. கே. ஏற்றுக்கொள்வார் என்றும், இம்மாறுதல்கள் அனைத்தும், செப்டம்பர் முதல் தேதியிலிருந்தே அமுலுக்குவரும் என்றும் கூறப்படுகிறது.

நிதிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற டி. டி. கிருஷ்ணமாச்சாரிதான், இந்தியா சுதந்திரமடைந்து கடந்த ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக நிதி இலாகா பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு காங்கிரஸ் கட்சி உறுப்பினராகும். இவருக்கு முன்—கடந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில் 3 பேர் நிதி மந்திரி பதவிகளில் இருந்திருக்கின்றனர். இறுதியில் இருந்த சிந்தாமணி தேஷ்முக் அவர்கள் காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியில் மட்டுமே துணைஉறுப்பினராக இருந்து வந்திருக்கிருர். மற்றிருவருமான ஆர். கே. சண்முகம், டாக்டர் ஜான் மத்தாய் ஆகிய இருவரும் எந்தவிதக் கட்சிச் சார்பும் அற்றவர்களாக இருந்தனர்.

மு. கருணுநிதி

தம்மம்பட்டி வருகை

3—9—56 மாலை 6 மணிக்கு, தம்மம்பட்டியில், தி.மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர் மு. கருணுநிதி அவர்கள், தி. மு. கழகக் கிளையைத் துவக்கிவைத்துச் சொற்பொழிவாற்றுவார்.

சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் கொடி ஏற்றுவிழாவாற்றுவார்; தோழர்கள் சிற்றுவி-சுப்பிரமணியம், ஆனைமுத்து ஆகியோர் பேசுவர்.

குறிப்பு : ஆங்காங்குள்ள கிளைக் கழகத் தோழர்கள் அனைவரும் தங்கள் கொடிகளுடன் வந்து அன்று மாலை 4 மணியளவில் நடைபெறவிருக்கும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப் பயணம்

செப்டம்பர்

1 : நாட்டறம்பள்ளி (வ. ஆ.)
2 : திருவண்ணுமலை
3 : காலை—கள்ளக்குறிச்சி
மாலை—வடக்கனந்தல்
கச்சிராயபாளையம்
4 : இனுப்பூர் (திருச்சி)
5 : புள்ளம்பாடி ,,

பி. அண்ட் சி. மில்
தி. மு. க. தேர்தல் நிதி

ஆலோசனைக் கூட்டம்

2—9—56 காலை 9-மணிக்கு, (சென்னை 24-வது வட்டம்) குயப்பேட்டை, கந்தசாமி கோவில் தெரு, எண் 50 இல்லத்தில், தோழர் டி. கே. பொன்னுவேலு (தி. மு. க. மாநில மாணவரணி அமைப்பாளர்) அவர்கள் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; பி. அண்ட் சி. மில் தொழிலாளர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நூலை நகர இளைஞர் கழகம்

1—9—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, எண் 10, மாணிக்கச்செட்டித் தெரு கழக மனையில், தோழர் எம். துரைக்கண்ணனர் தலைமையில், தோழர் டபிள்யூ. ஆனந்தரங்கம், மற்றும் பலர் 'குடியரசு' என்பது பற்றிப் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

1—9—56 மாலை 6 மணிக்கு, முத்தமிழ் மன்றப் பணிமனையில், தோழர் சு. இரத்தினம் தலைமையில், 'சொல் வேறு—செயல் வேறு' எனும் தலைப்பில், மன்றத் தோழர்களும் மற்றும் பலரும் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

1—9—56 இரவு 7 மணிக்கு, சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், கல்மண்டபம் நகராண்மைக் கழக ஆண் பள்ளியில், திரு. அ. ஞானசுந்தரம் அவர்கள், குறளில் 'இல்வாழ்க்கை' எனும் அதிகாரத்திற்குப் பொருள் கூறி விரிவுரை நிகழ்த்துவார்.

'அரக்கு மாளிகை'-நாடகம்

1—9—56 இரவு 9 மணிக்கு, திருக்கழுக்குன்றம் அடுத்த தேசுமுகிப்பேட்டையில், தோழர் வி. வேணு தலைமையில், தி. மு. கழகத் தோழர்கள் அளிக்கும் 'அரக்கு மாளிகை' என்ற நாடகம் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

குடியேற்றம் (வ. ஆ.) :
ஆற்று திடலில்
2—9—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர் : அண்ணு

★

கீழ்ணுத்தூர் :
(திருவண்ணுமலை)
2—9—56 மாலை 6-30 மணிக்கு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
ப. உ. சண்முகம்

★

நாகப்பட்டினம் :
அவுரித் திடலில்
2—9—56 மாலை 6-30 மணிக்கு
பேசுபவர் : ஈ. வெ. கி. சம்பத்
(குறிப்பு :—இரவு 10 மணியளவில் தி. மு. கழகக் கட்டிடத்தில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தோழர் ஈ வெ. கி, சம்பத் அவர்கள் ஆய்வுரை வழங்குவார்)

★

சைதை—சென்னை
காரணீசுவரர் கோயில் தெரு
2—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : த. சம்பந்தம்
பேசுவோர் :
பி. அண்ணுமலை
ஜி. பி. குமுதா

★

பல்லடம் :
2—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : எம். பழனியப்பன்
பேசுவோர் :
வி. சண்முகநாதன்
மே. சி. சிதம்பரனர்
எம். முத்துரத்தினம்
பி. எம். பொன்னுசாமி

★

குணியமுத்தூர் :
கழகப் பணிமனை எதிரில்
2—9—56 மாலை 6-30 மணிக்கு
பேசுவோர்:
சே. அ. இராசமாணிக்கம்
மு. இராமநாதன்
தங்கமாணிக்கம்
(குறிப்பு :—தோழர் ஈ வெ. கி. சம்பத் அவர்கள் பேருரையில் ஆற்றிய சொற்பொழிவு ஒலிபரப்பப்படும்)

★

மந்திரிபாளையம் :
1—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : பி. நல்லசாமி
பேசுவோர் :
வி. சண்முகநாதன்
எஸ். அப்பாவு
எம். முத்துரத்தினம்
பொன்னுசாமி

★

கச்சிராயபாளையம் :
மண்டிக்கு அருகில்
தி. மு. கழகத் துவக்க விழா
3—9—56 மாலை 5 மணிக்கு
தலைவர் : வி. டி. இளையாபிள்ளை
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
எ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
ஆர். இராசு
வி. விநாயகத்தான்
(குறிப்பு:-அன்று மாலை 3-மணிக்கு, 101 இணை காளைகள் பூட்டிய இரதத்தில், பலவித நிகழ்ச்சிகளுடன் பொதுச்செயலாளர் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

★

74. கிருட்டிணுபுரம் :
(எண்ணைக்காரன்புதூர்)
3-9-56 மாலை 3-30 மணிக்கு
தி மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : ஜி. பி. சோமசுந்தரம்
கொடியேற்றுபவர் :
இரா. தாண்டவன்
துவக்குபவர் : மு. கருணுநிதி
பேசுவோர் :
எம்.பி. சுப்பிரமணியம் M.L.A.
சிற்றுளி-சுப்பிரமணியம்
ஆனைமுத்து
ப. இராமலிங்கம்

திருவாடி :
அழகிரி பந்தலில்
3—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : சௌந்திரபாண்டியன்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
ப. நாராயணசாமி
துரை, வையாபுரி

★

முதலூர் :
வி. எஸ். திடல் (என். எம். எஸ். கிளப் விளையாட்டு மைதானம்)
3—9—56 இரவு 8 மணிக்கு
பேசுபவர் : மதுரை எஸ். முத்து

★

கோனேரிப்பட்டி :
3-9-56 மாலை 4-30 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : ப. இராமலிங்கம்
கொடியேற்றுபவர் :
எம்.பி.சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
துவக்குபவர் : மு. கருணுநிதி
பேசுவோர் :
ஜி பி. சோமசுந்தரம்
சிற்றுளி-சுப்பிரமணியம்
ஆனைமுத்து
இரா தாண்டவன்

தென்னுற்காடு மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகப்

பிரதிநிதிகள் கூட்டம்

"3—9—56 காலை 10 மணியளவில், தென்னுற்காடு மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம், கள்ளக்குறிச்சி முசாபரி பங்களாவில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

"கீழ்க்காணும் பொருள்கள் பற்றிப் பரிசீலிக்கப்படும் :—

"1. மாநில மாநாடு நிதி வசூல் கணக்கு பார்த்தல்; 2. மாவட்டத்தில் இயக்க வளர்ச்சி ; 3. பொதுத் தேர்தல் பற்றி ஆராய்தல்; 4. இதர விஷயங்கள். மாவட்டப் பிரதிநிதிகள் அவசியம் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிக்கிருர்.

இராமசாமி—கல்யாணி

பெண் மகவுக்குத் தாயானர்

சென்னை, ஆக. 31—

நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களின் இல்லக்கிழத்தியார் கல்யாணி அவர்களுக்கு ஒரு பெண் மகவு இன்று காலை 9-30 மணிக்குப் பிறந்தது. தாயும் சேயும் நலம். இரங்கா நர்சிங் ஓமில் தங்கி இருக்கிருர்கள். கே. ஆர். இராமசாமி அவர்கள், தமது நாடகக் குழுவுடன் சிங்கப்பூரில்கலைப்பணியாற்றி வருகிருர்.

அமெரிக்காவில் வெளிநாட்டு முதலீடுகள்

1955 கடைசியில் அமெரிக்காவில் வெளிநாடுகளின் சொத்துக்கள் 2,960 கோடி டாலராக இருந்தது என அமெரிக்க வர்த்தக இலாகா தெரிவித்துள்ளது. டாலர் சொத்துக்களாக 1,700 கோடி டாலரும், நீண்டகால முதலீடுகளாக 1,260 கோடி டாலரும் இச்சொத்துக்களில் அடங்கியுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.